# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 12/மா/2017

ஆணை எண். 24/2017

நாள் : 02/03/2017

18.10.2016 நாளிட்ட தினகன் நாளிதழ் செய்தி – தாமாக முறையீடாக பதிவு செய்யப்பட்டது.

மாநகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி. – எதிர் மனுதாரர்

"திருச்சி மாநகராட்சியில் ஐந்து ஆண்டுகளாக அலுவலர்கள், பணியாளர்கள் பற்றாக்குறை" என்ற தலைப்பில் 18.10.2016 நாளிட்ட தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தியினை இம்முறைமன்ற நடுவம் 12/2017 எண்ணிட்ட வழக்காகப் பதிவு செய்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை :-

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஐந்து ஆண்டுகளாக அலுவலர்கள், பணியாளர்கள் பற்றாக்குறை என்ற தலைப்பில் 18.10.2016 நாளிட்ட தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியில், மாநகராட்சியின் மையப்பிரிவில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக உதவி ஆணையர் (பணிகள்) மற்றும் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள பணியிடங்கள் காலியாக உள்ளனவென்றும் பொது மக்கள், தங்களது வார்டு சம்பந்தப்பட்ட அடிப்படைத் தேவைகளுக்கு அணுக உரிய அலுவலர்கள் இல்லாததால் பெரும் அவதிக்குள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், மாநகராட்சியின் முக்கியப் பணியினை செயல்படுத்தும் மையப்பிரிவில் பணியாற்றிவரும் கண்காணிப்பாளர் மற்றும் பொன்மலைக்கோட்ட உதவி வருவாய் அலுவலர் (பொ) உள்ளாட்சித் தேர்தல் பணியென பல பணிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாநகராட்சிப் பணியாளர்களின் பணி உயர்வு மற்றும் இடம் மாறுதல் செய்வதில் தேக்கநிலை மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான விருந்தினர் மாளிகையில் அறைகள் ஒதுக்குவதிலும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

2. மேற்குறிப்பிட்ட நாளிதழ் செய்தி குறித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. 15.2.2017 நாளிட்ட கடிதம் எண்.878/சி1/2017-ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையர் தனது விரிவான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையில், மைய அலுவலகத்தில் கண்காணிப்பாளர் நிலையில் காலிப் பணியிடங்கள் ஏதும் இல்லையென்றும், கோ.அபிசேகபுரம் கோட்டத்தில் காலியாகவுள்ள கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு பணித்தேர்ச்சி பட்டியல் தயாரிக்கப்பட்டு அப்பணியிடத்தில் அலுவலர் நியமனம் செய்யப்படுவார் எனவும் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மாநகராட்சி விருந்தினர் மாளிகையில் விருந்தினர்களுக்கு அறைகள் ஒதுக்குவதில் எந்தவித இடர்பாடுகளும் இல்லையென்றும் கீழ்நிலையிலான பணியிடங்களை நிரப்புவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு உரிய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதென்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்படி அறிக்கை பரிசீலிக்கப்பட்டது. இந்நேர்வில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சித் தனி அலுவலர் மற்றும் ஆணையர் உரிய நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், மாநகராட்சியில் அலுவலர் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக பொதுமக்களுக்கு எந்தவிதத் தடங்கலுமின்றி உரிய சேவை வழங்கிட மாநகராட்சி உறுதி செய்திட வேண்டும் என அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 2–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

இ.கோ. / உதிரி